# හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
## Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහ භාණ්ඩාගාරය, මුදල් අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Colombo 01, Sri Lanka

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General | දුරකථන / தொலைபேசி / Telephone | +94 11 2484729 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax | +94 11 2431498 | ඊ-මේල් / மின்-அஞ்சல் / E-mail | dgto@tod.treasury.gov.lk |
| මගේ අංකය / எனது இல / My Number | TO/CFM/Bank/2018 | | ඔබේ අංකය / உமது இல / Your Number | | දිනය / திகதி / Date | 2018.07.26 |


திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை: 3/2018

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்,

**தொழிற்படாத உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை மூடிவிடுதல்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 8 ஆவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரின் 35 ஆம் இலக்க வெளியீட்டில் அரசாங்கக் கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் காணப்படுகின்ற தீர்க்கப்படாதுள்ள, தொழிற்படாத உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள அதேவேளையில், இவ்வாறான கணக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் தொடர்ச்சியான கணக்காய்வு விசாரணைகளுக்கு உட்படுவது அவதானிக்கப்படுகின்றது.

அவ்வாறான தொழிற்படாத உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை மூடிவிடுவதற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் தொடர்புடைய அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அடிக்கடி அறிவிக்கப்பட்ட போதிலும், அதன் மீது காட்டப்படுகின்ற பதில்நடவடிக்கைகள்/ முன்னேற்றங்கள் போதுமானதாக இல்லை என்பது மேலே குறிப்பிடப்பட்ட அரசாங்கக் கணக்குக் குழுவின் அறிக்கைகளினூடாகவும் கணக்காய்வு விசாரணைகளினூடாகவும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

அதனால் மேலே குறிப்பிடப்பட்டவாறு பாராளுமன்ற கணக்குக் குழுவின் அறிக்கைகளின் மூலமும் கணக்காய்வு விசாரணைகளின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அல்லது இந்தத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள தொழிற்படாத உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் தங்கள் அமைச்சின்/ திணைக்களத்தின் கீழ் காணப்படுமாயின், அவ்வாறான கணக்குகளை அவசரமாக மூடிவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறியத் தருகிறேன். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் 2015.10.23 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி TOD/BA/03 மாதிரிப்படிவத்தை சரியாகப் பூர்த்திசெய்து, 2018.08.20 ஆம் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் இந்தத் திணைக்களத்திற்கு அனுப்புமாறு தயவாய் அறியத் தருகிறேன்.

இந்தப் பணிக்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுப்பதன் மூலம் விடயப்பரப்பிற்குரிய விடயங்கள் சம்பந்தமான கணக்காய்வு விசாரணைகளுக்கு உட்படுவதையோ அல்லது அரசாங்கக் கணக்குக் குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு உட்படுவதையோ தவிர்த்துக்கொள்ள முடியும். மேலும் அதன் மூலம் அரச நிதியை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் செயற்படுத்துவதற்கு உதவும் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சீ.ஜே.கே. பெரேரா
திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்: (i) கணக்காய்வாளர் அதிபதி
(ii) செயலாளர், அரசாங்கக் கணக்குக் குழு